**بسم الله الرّحمن الرّحيم**

# அந்நியர்களின் கலாச்சாரத்தில்!

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகமும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள்: நம்பிக்0கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! உங்கள் முன் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்தவனாக, அல்லாஹ்வுடைய தூதர் மீதும் அந்த தூதரின் பரிசுத்தமான குடும்பத்தார் தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் கூறியவனாக!

எனக்கும், உங்களுக்கும், அல்லாஹ்வின் உபதேசமாகிய தக்வாவை நினைவூட்டியவனாக, அல்லாஹ்வை பயந்து வாழவேண்டும் என்று எனக்கும் உங்களுக்கும் உபதேசித்தவனாக இந்த ஜும்ஆ குத்பாவை ஆரம்பம் செய்கிறேன்.

அல்லாஹ் நமது பாவங்களை மன்னிப்பானாக. நேர்வழி பெற்ற மக்களில் என்னையும் உங்களையும் சேர்த்து அருள் புரிவானாக. வழிகேடுகளை விட்டும், வழிகேடான சிந்தனைகள், செயல்களை விட்டும், அல்லாஹு சுப்ஹானஹு தஆலா என்னையும் உங்களையும் நமது உம்மத்தையும் பாதுகாத்து அருள்வானாக! ஆமீன்!

அன்பானவர்களே! அந்நியக் கலாச்சாரத்தால் நமது சமுதாயம் எத்தகைய ஒருபாதிப்பை அடைந்திருக்கிறது என்பதை பற்றிய ஒருசில விளக்கங்களை இந்த சூழ்நிலையில் நாம் தெரிந்துகொள்வது மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது.

அல்லாஹு சுப்ஹானஹு தஆலா நமக்கென்று கொடுத்திருக்கக்கூடிய இந்த இஸ்லாமிய மார்க்கம், ஒரு தனிச்சிறப்புமிக்க மார்க்கம். அல்லாஹ்வுடைய இந்த மார்க்கத்தை தவிர அனைத்தும் பொய்யானது.

அல்லாஹ்வுடைய இந்த நேர்வழியைத் தவிர, அனைத்தும் வழிகேடுகள் உடையது. இது ஒரு நீதமான, பரிசுத்தமான, அறிவுப்பூர்வமான, நாகரீகமான ஒரு கலாச்சாரத்தை உடைய மார்க்கம்.

ஒரு முஸ்லிம் அவர் ‘‘ لا إله إلا الله، محمد رسول الله ’’ என்று கூறி இஸ்லாமிற்குள் நுழையும்போது, அவர் முஸ்லிமாக இருக்கும்போது தனது இஸ்லாமிய மார்க்கம் ஒன்றை மட்டும் தான் அவர் பின்பற்ற கடமைப்பட்டுள்ளார்.

வார்த்தையால், மொழியால் கூறிய அந்த திருகலிமாவை சொல்வது மட்டும் அல்லது சொல்லிக் கொண்டிருப்பது மட்டும் ஒருவரை முஸ்லிமாக மாற்றி விடாது; முஸ்லிமாக இருக்க செய்துவிடாது.

மாறாக வார்த்தையால் கூறிய அந்த திருகலிமாவிற்கு ஏற்ப, அந்த திருகலிமாவால் இவர் பெற்றிருக்கக்கூடிய இஸ்லாமிய மார்க்கத்தை, அந்தத் திருகலிமாவில் இடம் பெற்றிருக்கக் கூடிய முஹம்மத் (ஸல்) அவர்களுடைய அழகிய மிகவும் பரிசுத்தமான, மிகவும் ஒழுக்கம் நிறைந்த, மனிதனை மனிதனாக வைத்திருக்கின்ற அவர்களுடைய அந்த கலாச்சாரத்தை மட்டுமே, அவர் பின்பற்றி வாழும் போதுதான் அவர் முஸ்லிமாக இருக்கின்றார்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய கலாச்சாரத்திற்கு மாற்றமாக அவர்களுடைய கலாச்சாரத்தில் இல்லாத ஒன்றை, ஒருவர் அழகாக பார்த்து, அதை கவர்ச்சியாக பார்த்து, சிறந்ததாக எண்ணி பின்பற்றினால், அவருக்கும், அல்லாஹ்வுடைய தூதருக்கும், எந்த சம்மந்தமும் இல்லை. அவருக்கும் இந்த மார்க்கத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

நீங்கள் ஹதீஸ்களை ஆழ்ந்து, ஆராய்ந்து படித்தால், இந்த உண்மையை நூற்றுக்கணக்கான ஹதீஸ்களில் நீங்கள் பார்க்கலாம்.

கண்ணியத்திற்குரியவர்களே! நம்மை படைத்த ரப்பு அல்லாஹ் இதை நமக்கு மிக அழுத்தமாக சொல்கிறான் ;

وَأَنَّ هَذَا صِرَاطِي مُسْتَقِيمًا فَاتَّبِعُوهُ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيلِهِ ذَلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَتَّقُونَ

''நிச்சயமாக இதுதான் என் நேரான வழியாகும். அதையே நீங்கள் பின்பற்றுங்கள்; மற்ற வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை அல்லாஹ்வுடைய வழியிலிருந்து உங்களைப் பிரித்துவிடும். நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆவதற்காக (உங்கள் இறைவன்) இவற்றை உங்களுக்கு உபதேசிக்கிறான்'' (என்று கூறுங்கள்). (அல்குர்ஆன் 6 : 153)

கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள்! அல்லாஹ்வுடைய அழுத்தம் நிறைந்த அல்லாஹ்வுடைய மிகப்பெரிய எச்சரிக்கையுடைய வாசகமாக இதை நாம் பார்க்க வேண்டும்.

இதைத்தவிர உள்ள அத்தனை பாதைகளும் கோணல் நிறைந்தது; குழப்பங்கள் உடையது; பிரச்சினைகள் உடையது; மனிதனை மிருகமாக மாற்றக்கூடியது.

இஸ்லாம் சொல்லக்கூடிய, அழகிய கலாச்சாரம் மட்டும்தான், உலகத்தில் மனிதனை மனிதனாக வைத்திருக்கக்கூடியது; மனிதனுக்கு கண்ணியத்தை கொடுக்கக்கூடியது; மனிதனை உயர்வு, மதிப்பு, மேன்மை, கண்ணியத்தின் உச்சியில் வைத்து பார்த்து அழகு பார்க்கக்கூடியது.

இஸ்லாமை தவிர உள்ள எந்த கலாச்சாரமாக இருக்கட்டும், கிறிஸ்தவர்களின் கலாச்சாரமாக இருக்கட்டும், யூதர்களின் கலாச்சாரமாக இருக்கட்டும், சிலை வணங்கிகளின் கலாச்சாரமாக இருக்கட்டும், அல்லது உலகத்திலுள்ள எந்த மதக் கொள்கைகளின் கலாச்சாரமாக இருக்கட்டும், மனிதனை கேவலப்படுத்தி அழகு பார்க்கக்கூடியது; மனிதனை அசிங்கப்படுத்தி அழகு பார்க்கக்கூடியது; மனிதனை மிருகமாக்கி அழகு பார்க்க கூடியது; மனிதனின் ஒழுக்கத்தை மதிப்பை வைத்து அழகு பார்க்கக்கூடியது.

அல்லாஹ்வுடைய இந்த தீன், இஸ்லாம் ஒன்று மட்டும் தான் மனிதனை மனிதனாக வைத்து அவனை மிக உயர்வாக வைத்து, அவனை கண்ணியப்படுத்தும்; அவனுக்குண்டான அழகுகளையும் உயர்வுகளையும் மதிப்புக் கொடுத்து அழகு பார்க்கக்கூடியது.

இப்பொழுது சொல்லுங்கள்; எந்த கொள்கை நமக்கு வேண்டும்? என்று. எந்த மார்க்கம் நமக்கு வேண்டும்? என்று. இது கிடைக்கப் பெற்றதற்கு பிறகு ஒருவர் இஸ்லாம் அல்லாத ஒன்றை, இந்த இஸ்லாமிய கலாச்சாரம் இல்லாத ஒன்றை விரும்பினால் அவரை விட மூடன் ஒருவன் இருக்க முடியுமா?

இதைத்தான் அல்லாஹ் கேட்கிறான்;

وَمَنْ يَرْغَبُ عَنْ مِلَّةِ إِبْرَاهِيمَ إِلَّا مَنْ سَفِهَ نَفْسَهُ وَلَقَدِ اصْطَفَيْنَاهُ فِي الدُّنْيَا وَإِنَّهُ فِي الْآخِرَةِ لَمِنَ الصَّالِحِينَ

எவன், தானே மூடனாகி விட்டானோ அவனைத் தவிர இப்றாஹீமுடைய (இஸ்லாம்) மார்க்கத்தைப் புறக்கணிப்பவன் யார்? நிச்சயமாக நாம் அவரை இந்த உலகில் தேர்ந்தெடுத்தோம், மறுமையிலும் நிச்சயமாக அவர் நல்லடியார்களில்தான் இருப்பார். (அல்குர்ஆன் 2 : 130)

அல்லாஹ் கேட்கிறான் ;

وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ

இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கவே படமாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்த வராகவே இருப்பார். (அல்குர்ஆன் 3 : 85)

இந்த இஸ்லாம் அல்லாத ஒன்றை யார் கலாச்சாரமாக, கொள்கை நாகரீகமாக, எடுத்துக்கொள்வாரோ, வழிபாடாக எடுத்துக்கொள்வாரோ அவரிடமிருந்து எதுவுமே ஏற்றுக் கொள்ளப்படாது.

சாதாரண விஷயமல்ல! ஏதோ விருப்பத்திற்கு உட்பட்ட விஷயம் என்று எண்ணிக்கொள்ளாதீர்கள்.

நாம் தொழுதால் போதும்; ரமலானில் நோன்பு நோற்றால் போதும்; நான் முஸ்லிம் என்று சொல்லிக்கொண்டால் போதும்; இதோடு நமது மார்க்கத்தின் தொடர்பு நின்றுவிடவில்லை.

அன்பானவர்களே! கலாச்சாரத்தால், நாகரீகத்தால், ஒழுக்கத்தால், பண்பாட்டால், சமுதாயத்தால், இஸ்லாம் நமக்குள் வரவேண்டும். இஸ்லாமிற்க்குள் நாம் இறங்க வேண்டும்.

இதைத்தான்அல்லாஹ் மேற்சொன்ன வசனத்தில் சொல்கிறான்; (அல்குர்ஆன் 6 : 153)

கண்ணியத்திற்குரியவர்களே! நம்மை படைத்த இறைவன் நமக்கு சொர்க்கத்தை தருவதற்காக, நம்மை மேன்மைப்படுத்துவதற்காக, நம்மை

அழகுப்படுத்திப்பார்ப்பதற்காக, நம்மை கண்ணியம், மதிப்பு மரியாதையின் உச்சத்தில் வைத்துப்பார்ப்பதற்காக, நமக்குக் கட்டளையிடுகிறான்.

அவனுக்கு என்ன நன்மை இருக்கிறது? யோசித்துப்பார்த்தீர்களா? அல்லாஹ்வுடைய தீனை பின்பற்றுவதால் நமக்கு நன்மையா? அல்லாஹ்விற்கு நன்மையா? கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும்.

ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அழகான அந்தக்கலாச்சாரத்தை பின்பற்றுவதால், நமக்கு நன்மையா? அல்லது அல்லாஹ்வுடைய தூதருக்கு நன்மையா? அல்லாஹ்வுக்கு நன்மையா? யோசித்துப்பார்த்தீர்களா?

பிறகு என்ன சொல்கிறான்? எங்கெல்லாம் ஒரு கட்டளையின் அழுத்தத்தை கொடுக்க வேண்டுமோ அந்த வசனங்களை எல்லாம் நீங்கள் எடுத்துப் பாருங்கள் .

அல்லாஹ் இரண்டு கோணங்களிலும், அந்தக் கட்டளையை வலியுறுத்துவான்; நன்மையை ஏவுங்கள், தீமையை தடுங்கள்.

தராசுகளை நீளமாக நிறுங்கள்; அளவில் குறை செய்யாதீர்கள்; உண்மையைப் பேசுங்கள்; நீங்கள் பொய் பேசாதீர்கள்.

இப்படி இரண்டு கோணங்களில், கட்டளையாகவும், விலக்கலாகவும் அல்லாஹ் உறுதிப்படுத்துவான்.

இதை மட்டும் பின்பற்றுங்கள்; இதைத் தவிர எதையும் பின்பற்றாதீர்கள்.

இது யாருக்கு பதில்? யார் முஸ்லிம் என்ற பெயரில் வாழ்ந்தால் போதும், நம்முடைய கலாச்சாரத்தில் வாழ வேண்டிய அவசியமில்லை, முஸ்லிம் என்று பெயர் வைத்தால் போதும், ஏதோ பள்ளிவாசலுக்கு வந்து சிலவேளை தொழுதால் போதும் என்று எண்ணுகிறீர்களா? அவர்களுக்கு அல்லாஹ் பதில் சொல்கிறான் ;

இல்லை, நீங்கள் முஸ்லிமாக வாழவேண்டுமென்றால் முஸ்லிமாக நீங்கள் அடையாளம் காணப்படவேண்டும்.

இன்னும் எத்தனை பேர் பள்ளிவாசலுக்கு வெளியில் பார்த்தால், அவரை இதற்கு முன்பே நீங்கள் அறிந்திருந்தாலே தவிர, அவரை இதற்குக்முன்பே அறிந்திருந்து, அவரது பெயரை தெரிந்தாலே தவிர, அவரை நீங்கள் முஸ்லிமாக கண்டுகொள்ள முடியாது.

அவர் உங்களுக்கு ஸலாம் சொல்லி தன்னை முஸ்லிம் என்று சொன்னால் தவிர.

அல்லாஹ் சொல்கிறான்:

நீங்கள் பல பாதைகளில் செல்லாதீர்கள்; பல பாதையை பின்பற்றாதீர்கள்! அந்த பாதைகள் எல்லாம் உங்களை அல்லாஹ்வுடைய பாதையில் இருந்து பிரித்து விடும்; தூரப்படுத்திவிடும். இது அல்லாஹ் உங்களுக்கு செய்த அறிவுரையாகும்.

இது அல்லாஹ் உங்களுக்கு கூறக்கூடிய கட்டளையாகும். நீங்கள் தக்வா உள்ளவராக இருப்பதற்காக. நீங்கள் இறையச்சம் உள்ளவராக மாற வேண்டும் என்பதற்காக, அல்லாஹ் உங்களுக்கு கொடுத்த கட்டளை. (அல்குர்ஆன் 6 : 153)

கண்ணியத்திற்குரியவர்களே! ஆகவே ஒரு முஸ்லிம் தன்னுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் தான் பேசுவதாக இருந்தாலும் சரி, பார்ப்பதாக இருந்தாலும் சரி, உட்காருவதாக இருந்தாலும் சரி, வீட்டிற்குள் வருவதாக இருந்தாலும் சரி, வீட்டை விட்டு வெளியே செல்வதாக இருந்தாலும் சரி, தங்களுடைய திருமணமாக இருந்தாலும் சரி, இழப்பாக இருந்தாலும் சரி, எந்த ஒரு மகிழ்ச்சியான துக்கமான சூழ்நிலையாக இருந்தாலும் சரி,

அல்லாஹ்வுடைய தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அதற்கென்று காட்டித்தந்திருக்கக்கூடிய கலாச்சாரத்தை தவிர, அவர் வேறுஎந்த கலாச்சாரத்திலும் தன்னுடைய சுகதுக்கங்களை தன்னுடைய வாழ்நாளை அமைக்கக்கூடாது.

அப்படி ஆக்கினால், அதற்கு மாற்றமான ஒரு கலாச்சாரத்தில் வைத்துக்கொண்டால், அவர் யாருடைய கலாச்சாரத்தை பின்பற்றுகிறாரோ, யாருடைய கலாச்சாரம் அவருக்கு பிடிக்குதோ, யாருடைய கலாச்சாரம் அவருக்கு கவர்ச்சியாக இருக்கிறதோ, அவர் அந்த சமுதாயத்தை சேர்ந்தவர்.

அவருக்கும் மார்க்கத்திற்கும் இந்த தீனிற்கும் சம்பந்தம் இல்லை, அல்லாஹ் பாதுகாப்பானாக!

அல்லாஹ்வுடய தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஒரு ஹதீஸை பார்க்கிறோம் ;

«لَتَتَّبِعُنَّ سَنَنَ مَنْ قَبْلَكُمْ شِبْرًا بِشِبْرٍ، وَذِرَاعًا بِذِرَاعٍ، حَتَّى لَوْ سَلَكُوا جُحْرَ ضَبٍّ لَسَلَكْتُمُوهُ»

உங்களுக்கு முன்னால் சென்றவர்களின், அதே அடிச்சுவடுகளில், அதே பாதைகளில் நீங்களும் பின்பற்றி செல்வீர்கள். சானுக்கு சான், முழமுக்கு முழம் என்ற அடிப்படையில் அவர்களை ஒட்டி ஒட்டி ஓடுவீர்கள். அவர்களின் ஒருவன், உடும்பின் பொந்தில் நுழைந்தால் அதிலும் நுழைந்து நீங்கள் என்ன இருக்கிறது என்று பார்க்க ஆசைப்படுவீர்கள்.

அறிவிப்பாளர் : அபூ சயீத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 3456.

இங்கு நபி (ஸல்) அவர்கள் எதை சொல்லித்தருகிறார்கள்?

அவர்கள் என்னென்ன கிறுக்குத்தனங்களை, முட்டாள்தனங்களை, வேடிக்கைகளை, மடத்தனங்களை செய்தார்களோ, அவற்றையெல்லாம் நீங்கள் அழகாகக் கருத ஆரம்பித்துவிடுவீர்கள்.

அந்த அசிங்கங்கள் எல்லாம் உங்களுக்கு நாகரிகமாக தோன்ற ஆரம்பித்துவிடும். பிறகு அதை பின்பற்றுவீர்கள்.

ஒரு உடும்பின் பொந்து எவ்வளவு பெரிதாக இருக்கும்? அதற்குள் அவர்களின் ஒருவன் உள்ளே சென்று தோன்றிப்பார்த்து, ஏதாவது செய்திருந்தான் என்று சொன்னால் அப்படி நீங்களும் செய்ய ஆசைப்படுவீர்கள் என்று சொன்னதிலிருந்து, எந்தளவு இந்த சமுதாயத்தில் இஸ்லாமிய அறிவு குன்றிப்போய் இந்த சமுதாயத்தில் தெளிவான பிரகாசமான அறிவு மங்கி மழுங்கி, மடதனத்தின் உச்சத்தில் இந்தச்சமுதாயம் சென்றுவிடும், என்பதை எச்சரித்து அல்லாஹ்வுடைய தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள்.

அப்பொழுது ஸஹாபாக்கள் கேட்டார்கள்; யா ரசூலல்லாஹ் இந்த முந்திய உம்மத் என்று சொல்கிறீர்களே, நீங்கள் யாரை சொல்கீறீர்கள்?

அல்லாஹ்வுடைய தூதர் அவர்கள் சொன்னார்கள்;

வேறு யார் இருக்கிறார்கள்? வேறு யாரை நான் சொல்லப்போகிறேன்?

அறிவிப்பாளர் : அபூ சயீத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 3456.

கண்ணியத்திற்குரியவர்களே! அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! இழந்துவிட்ட அறிவை, நேர்வழியை, பரிசுத்தமான கலாச்சாரத்தை, அல்லாஹ்தஆலா நமக்கு திருப்பி தருவனாக!

இன்று இந்த சமுதாயத்தின் பார்வை மாறிவிட்டது, அதன் சிந்தனை மாறிவிட்டது,

எதை அந்த யூதர்களும், கிறிஸ்தவர்களும் அழகாக காட்டுகிறார்களோ, அது இந்த சமுதாயத்திலிருந்து அழகாக நினைக்கிறது, எதை அந்த யூத கிறிஸ்துவ சமயம், அறிவாக பேசுகிறார்களோ, அது இந்த சமுதாயத்திற்கு அறிவாக இருக்கிறது.

எதை அந்த யூத கிறிஸ்தவ சமயம், ஒழுக்கமாக, கலாச்சாரமாக, போதிக்கிறார்களோ, அது இந்த சமுதாயத்திற்கு கலாச்சாரமாகவும் ஒழுக்கமாகவும் தெரிகிறது.

இது வெறும் வார்த்தை மட்டுமல்ல. நம்முடைய சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கைக்கு சென்றுப்பார்த்தால், எந்தளவு நாம் பாதிக்கப்பட்டு இருக்கிறோம், நம்மை அறியாமல் நாம் எந்தளவு மாறி இருக்கிறோம்? என்பது புரியவரும்.

அல்லாஹ் பாதுகாப்பானாக! உதாரணமாக நாம் சில விஷயங்களை தெரிந்தே ஆகவேண்டும். ஒரு சில விஷயங்களை சுருக்கமாகவும், சில விஷயங்களை விரிவாகவும் நாம் தெரிந்துதான் ஆகவேண்டும்.

இன்று இந்த தேசியவாதம் என்று சொல்லப்படுகிறது. அதாவது நீ இந்த நாட்டைச் சேர்ந்தவன், நான் அந்த நாட்டைச்சேர்ந்தவன், இது எனது இனம், இது உனது இனம் என்று, இந்த சமுதாயத்தை பிரித்து அதனடிப்படையில் பெருமை பாராட்டுவது.

ஒரு நாட்டை சேர்ந்தவர் நான் மிகப்பெரியவன், எனது நாடு கண்ணியமானது, எனவே நான் கண்ணியமானவன் என்று, எப்படி அய்யாமுல் ஜாஹிலிய்யாவில், அரபுகள் குலப்பெருமை பேசினார்களோ, அதுபோன்று இனவாதம் பேசுவது.

இந்த இனவாதம் பேசுவதுதான் இன்றைய முஸ்லிம் சமுதாயத்தை கூறுகூறாக கிழித்து பிரித்திருக்கிறது.

அல்லாஹ் நம்மை ஒரே உம்மத்தாக அமைத்தான். அல்லாஹ்வுடைய தூதர் நபி (ஸல்) அவர்கள் ஒரே உம்மத்தாக, ஒரே கொள்கையுடையவர்களாக நம்மை விட்டுச்சென்றார்கள்.

நம்முடைய நாடுகள், நம்முடைய மொழிகள், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசம் மாறுபட்டாலும், முஸ்லிம்களாகிய நாம் மாறுபடக்கூடாது.

இனவாதம், மொழி வாதம், தேசியவாதம் பேசி, ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை அந்நியனாக பார்க்கக்கூடாது.

அப்படி பார்த்தால், அவர் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வெளியேறி விடுவார்.

இன்று இந்த ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரரர்கள், இன்னும் மேற்கத்தியர்கள், ஐரோப்பிய மக்களின் காலணி ஆதிக்கங்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் நாடுகளின் மிகப்பெரிய பாதிப்பு இந்த இனவாதத்தினால்தான் ஏற்பட்டது.

முஸ்லிம்கள் ஒரு முஸ்லிமாக இருந்தார்கள்; ஒரு உம்மத்தாக இருந்தார்கள். அவர்களின் பிரதேசங்களின் அடிப்படையில் பிரித்தார்கள், பிறகு அவர்களின் மொழியின் அடிப்படையில் பிரித்தார்கள்.

பிறகு அவர்களின் உருவத்தின் அடிப்படையில், நிறத்தின் அடிப்படையில் பிரித்தார்கள். இப்படி பல கூறுகளாக பிரித்து அவர்களுக்கு மத்தியில் பகைமை வெறுப்பை மூட்டிவிட்டு, அவர்களில் ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தோடு சேராமல், அந்த மூட்டப்பட்ட நெருப்பு அணையாமல், இன்றுவரை அந்த மேற்கத்தியர்கள், அந்த காலனி ஆதிக்ககாரரர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் கைதேசம் கவலை என்ன என்று தெரியுமா? அதை உணராமல் நாம் இருக்கிறோம்.

அவர்களோடு தான் நட்பு பாராட்டுகிறோம்; அவர்களோடு தான் நம்முடைய தோழமை பாராட்டுகிறோம். அல்லாஹ் பாதுகாப்பானாக!

அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்;

«لَيْسَ مِنَّا مَنْ دَعَا إِلَى عَصَبِيَّةٍ، وَلَيْسَ مِنَّا مَنْ قَاتَلَ عَلَى عَصَبِيَّةٍ، وَلَيْسَ مِنَّا مَنْ مَاتَ عَلَى عَصَبِيَّةٍ»

யார் இனவாதத்தின் பக்கம் அழைக்கிறாரோ அவர் நம்மைச்சேர்ந்தவர் அல்ல. இனவாதத்திற்காக ஒருவர் யுத்தம் செய்தால் அவரும் நம்மைச்சேர்ந்தவர் அல்ல, இனவாதத்திற்காக யார் சண்டை செய்து, அல்லது இனவாதத்தின் கொள்கையை உள்ளத்தில் வைத்தவராக ஒருவர் இறந்துவிட்டால் அவரும் நம்மை சேர்ந்தவர் அல்ல. (1)

அறிவிப்பாளர் : ஜுபைர் இப்னு முத்இம் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூ தாவூத், எண் : 5121.

அந்த வாதத்தை அந்தக்கொள்கையை அவர் நம்பியிருந்தாலும், ஏற்றிருந்தாலும் அவர் நம்மைச்சேர்ந்தவர் அல்ல. அதை பேசினாலும் சரி, அந்த கொள்கையை மனதில் வைத்திருந்தாலும் சரி, அதற்காக அவர் சண்டை செய்தாலும் சரி.

அன்பானவர்களே! இன்று உலகில் நடக்கக்கூடிய பெரிய யுத்தங்கள், அதிகமான யுத்தங்களின் பின்னனியில் அவர்கள் பேசுகின்ற தேசியவாதமும், இனவாதமும், இருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள்.

அடுத்து அன்பானவர்களே! இந்த அந்நியர்களின் கலாச்சார தாக்கத்தின் ஒரு பெரிய பகுதி நம்முடைய முஸ்லிமான பெண்களில் இருப்பதைப் பார்க்கிறோம்.

நமது பெண்களை கெடுத்துவிட்டால் நமது சமுதாயத்தை மிக இலகுவாகக் கெடுத்துவிடலாம் என்பதை அவர்கள் தெளிவாக புரிந்து வைத்திருக்கிறார்கள்.

சமுதாயத்தில் ஒரு பெண்ணைக் கெடுத்துவிட்டால் போதும், அந்த ஒரு பெண்ணால் நூறு பெண்களைக் கெடுத்துவிடலாம், நூறு பெண்களை கெடுத்துவிட்டால் நூறு குடும்பங்களை கெடுத்து விடலாம்.

ஒரு குடும்பத்தில் பலபேர் என்று சொன்னால் பல நூற்றுக்கணக்கான பேரை ஒரு பெண்ணால் வழிக்கெடுக்கலாம் என்பதை தெளிவாக புரிந்து இருக்கின்ற அவர்கள், அவர்களுடைய கலாச்சார தாக்கத்தின் ஒரு பெரிய ஒரு முயற்சி என்ன? இஸ்லாமிய மார்க்கம் பெண்களை அடிமைப்படுத்துகிறது, இஸ்லாமிய மார்க்கம் உரிமைகளை பாதிக்கிறது, இஸ்லாமிய மார்க்கம் பெண்களுக்கான சுதந்திரத்தை கொடுப்பதில்லை, என்று பொய்ப் பிரச்சாரம் செய்து, தங்களின் வலையில் சிக்கிய பெண்களை வைத்து, அந்தப்பிரச்சாரத்தை செய்யவைப்பது. தங்களின் தீயவலையில் விஷம் நிறைந்த அந்த இனிப்பின் சுவையுண்ட, அதற்கு அடிமையாகிவிட்ட, அந்த பெண்களை வைத்து இஸ்லாமிய பெண்களின் நிலைப்பற்றி பரிகாசம் செய்வது; மீடியாக்களில் விமர்சனம் செய்வது.

இதனால் என்ன நிலைமைக்கு ஆளாகிறார்கள்?? அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்.

எந்த ஒரு பாதுகாப்பை கண்ணியத்தை, இஸ்லாமிய மார்க்கம் பெண்களுக்கு அவர்களின் ஆடைகளினால், அவர்களுடைய ஹிஜாப் பர்தா என்ற அந்த பேணிக்கையினால் கொடுத்ததோ அதிலிருந்து அவர்களை கழட்டி அவர்களைக் கொண்டு வந்து தெருவில் ஒரு போகப்பொருளாக, ஒரு வியாபாரப் பொருளாக, ஒரு சந்தையில் விற்கப்படும் ஒரு ஆடுமாடாக ஆக்கி, ஆண்களின் காமத்திற்கு அவர்களை பயன்படுத்தவேண்டும் என்பதுதான் அந்நியர்களின் இந்த பெண்ணுரிமை வாதத்திற்கு பின்னால் மறைந்திருக்கக் கூடிய உண்மை என்பதை மறந்துவிடாதீர்கள்.

அவர்களுடைய பெண்ணுரிமை வாதம் என்பது என்ன? அவர்கள் பயன்படுத்தக்கூடிய சோப்பிலிருந்து, சீப்பிலிருந்து ஆடையிலிருந்து, உடையிலிருந்து எந்தஒன்றாக இருந்தாலும் பெண்களின் கவர்ச்சி காட்டவேண்டும்.

எந்தப்பெண்களும், எந்தப்பெண்ணாக இருந்தாலும் சரி, எல்லா ஆண்களுக்கும் பொதுஉடைமை சொத்து என்பதைப் போன்று, பெண்களை அனுபவிப்பதற்கு அவர்கள் பேசக்கூடிய அந்தப் பெண்ணியம்தான்,பெண்ணுரிமை என்பதை மறந்துவிடாதீர்கள்.

தமிழில் சொல்வார்கள், "ஆடு நனைகின்றது என்று ஓநாய் கவலைப்படுகிறதாம் ".

அன்பிற்குரியவர்களே! இதுதான் அவர்களுடைய நோக்கம், நமது முஸ்லிம் பெண்களை வீதியில் கொண்டுவந்து நிறுத்தி, அவர்களின் மானத்தை வாங்க வேண்டும்; சமுதாயத்தில் இருக்கக்கூடிய குடும்ப உறவுகளை சீரழிக்க வேண்டும்.

மேற்கத்திய நாடுகளில் நீங்கள் எடுத்துப்பாருங்கள்; இதை நாம் பேச வேண்டியதில்லை, இன்று இதே கிரேட் பிரிட்டன் என்று சொல்லக்கூடிய லண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் மூத்த தலைவர்கள் சொல்கிறார்கள்;

இன்று உலகத்தில் குடும்ப உறவு, சமூகம் என்று ஒரு கட்டுப்பாடு, ஒரு பாதுகாப்பு, இரத்த உறவுகள் இருக்கிறது என்றால் அது முஸ்லிம்களிடம் மட்டும்தான் இருக்கிறது.

நாம் பேசுவது என்று எண்ணிவிடாதீர்கள்! அவர்கள் பேசுவது, அதற்கு காரணம் அவர்கள் பெண்களை பாதுகாக்கிறார்கள். நாம் பெண்களை சீரழித்தோம் என்று தங்களுடைய கலாச்சார சீரழிவின் பின்னணியில் இருக்கின்ற அந்த உண்மையை உணர்ந்து அவர்களின் இருக்கக்கூடிய சில நல்லவர்கள் இதை பேசுகிறார்கள்.

முஸ்லிம்களை தவிர வேறு எங்கும் சமூக குடும்ப உறவில் பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் வெளிப்படையாக பேசுகிறார்கள்.

ஏன்? பெண்களை நாம் பெண்களாக வைத்திருக்கின்ற காரணம்தான்.

அவர்கள் பெண்களை போகப்பொருளாக, ஒரு காமப்பொருளாக பயன்படுத்துகின்ற காரணத்தால் அங்கு குடும்பங்கள் இல்லை, எத்தனையோ நூற்றுக்கணக்கான குழந்தைகள், மேலை நாடுகளில் தங்களுடைய தந்தை யார்? என்று தெரியாது.

சமீபத்தில் பெரிய மேலை நாடுகளில் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டோம். யார் யாருக்கெல்லாம், தன்னுடைய உண்மையான தந்தை யார் என்று தெரியவேண்டுமோ? நீங்கள் DNA TEST செய்து கொள்ளலாம்.

அதற்காக ஒரு நடமாடும் வேன், எல்லா ஊர்களிலும் சுற்றிக்கொண்டே இருக்கும். உங்களுடைய அந்த டெஸ்ட் செய்து அந்த DNA யாருடன் சேர்கிறதோ என்பதை கண்டுபிடித்து உங்களுக்கு தகப்பனை நாங்கள் சொல்லிவிடுவோம்.

என்ன கலாச்சாரம் இது? இருக்கின்ற நாட்டுமக்கள் அத்தனை பேரையும், வேசியின் மக்களாக ஆக்கிவிட்டார்கள். இதைவிடக் கேவலம் என்ன இருக்கிறது?

அன்பானவர்களே! அவர்களின் பெண்ணுரிமை, பெண்ணியவாதத்திற்கு பின்னால், மறைந்து இருக்கக்கூடிய உண்மை இதுதான். அல்லாஹ் பாதுகாப்பானாக!

**அந்நியர்களின் கலாச்சாரத்தில்!**

அல்லாஹ் நமக்கு எவ்வளவு அழகான கலாச்சாரத்தை, கண்ணியத்தை கொடுத்திருக்கின்றான். இந்தப்பெண் அவளுடைய ஒழுக்கங்களைப் பேணி, தாயாக இருந்து, மனைவியாக இருந்து, குடும்பத்தை உருவாக்கினால், அதைவிட சிறந்த கண்ணியமான சமுதாயம், நிம்மதியான சமுதாயம், வேறு எந்த சமுதாயமாகவும் இருக்கமுடியாது. அத்தகைய கட்டுப்பாட்டை முஸ்லிம்களுக்கு மட்டும் தான் அல்லாஹ் கொடுத்திருக்கிறான்.

ஒரு முஸ்லிமான பெண் சினிமா நடிகையாக மாறமுடியாது. அவள் முஸ்லிமாக இருக்கின்றபோது. அப்படி மாறினால் அவள் முஸ்லிமாக இருக்கமுடியாது.

ஒரு முஸ்லிமான வாலிபன், அவன் ஒரு முஸ்லிமாக இருக்கின்ற நிலையில் ஒரு சினிமா நடிகனாக, ஒரு சீரியல் நடிகனாக மாறமுடியாது. அப்படி ஆகிவிட்டால் அவன் முஸ்லிமாக இருக்க முடியாது.

இந்த Co-education -கல்வியின் வளர்ச்சி என்ற பெயரில், நமது வாலிபர்களை நமது வாலிப பெண்களை சீண்டி எடுத்து, அவர்களை இந்த அசிங்கங்களை எல்லாம், கலை என்ற பெயரில், நாகரிகம் என்ற பெயரில், பள்ளிக்கூடத்தின் ஆரம்ப தொடக்கத்திலிருந்தே கற்றுக்கொடுக்கிறார்கள்.

இன்று இந்தியாவாக இருக்கட்டும், எங்கெல்லாம் மாற்றார்களின் பள்ளிக்கூடங்களில் நமது பிள்ளைகள் படிக்கிறார்களோ, சிறுவயதிலிருந்தே இசை, நடனம், இந்தக் கூத்தின் மீது அவர்களுடைய உள்ளங்களில் மோகம் திணிக்கப்படுகிறது; ஊட்டப்படுகிறது.

ஆகவே தான் அந்த கலாச்சாரத்தில் படித்து வாழ்ந்து வளர்ந்து வந்தவர்கள், இசையை குற்றமாகக் கருதவில்லை; அந்த நடிப்பை, அந்த ஆடல் பாடலை, குற்றமாகப் பார்ப்பதில்லை; வெட்க உணர்வு இருப்பதில்லை.

அதற்குப்பிறகு அவர்கள் திருந்தி, தவ்பாச் செய்து அல்லாஹ்வின் மார்க்கத்தைப் புரிந்து, அல்லாஹ்வின் மார்க்கத்திற்குள் முழுமையாக நுழைந்தாலே தவிர.

இல்லையென்றால் அதில் வளர்ந்தவர்கள் அடுத்து தங்களுடைய பிள்ளைகளை வளர்க்கும்போது, இவர்களுடைய தந்தைமார்கள், அதாவது வளரக்கூடிய இந்த பிள்ளைகளின் பாட்டனார்கள், அவர்கள் ஓரளவு சமுதாயத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததால், அவர்கள் பல விஷயங்கள் இருந்து தூரமாக இருக்கவேண்டிய நிர்பந்தம் இருந்தது.

இப்போது அந்த நிர்பந்தத்தை எடுத்துவிட்டு, தன்னுடைய பிள்ளைகளின் முழு சுதந்திரம் என்ற பெயரில் சமுதாயத்தின் கேடுகெட்டவர்களாக மாற்றி அழகு பார்க்கிறார்கள்.

இப்பொழுது படித்து வளர்ந்ததற்கு, ஒரு சமுதாயத்தின் பிள்ளைகளை நீங்கள் பார்க்கலாம், அவர்களுடைய ஆடை கலாச்சாரங்களை நீங்கள் பார்க்கலாம்.

அவர்கள்தான் இந்த சினிமாவிற்கு செல்வதை நீங்கள் பார்க்கிறீர்கள்; நடிகர்களாக, நடிகைகளாக மாறி சமுதாயத்தின் கண்ணியத்தை இழிவு படுத்திக் கொண்டிருக்கிறார்களே!

இந்த சமுதாயம் முஸ்லிம்களுக்கு என்று சொன்னால், இன்று முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக, முஸ்லிம் என்ற பெயரில் இருக்கக்கூடிய நடிகர்கள் நடிகைகளை முன்னுரிமைப்படுத்தி, அவர்களை முன்னிலைப்படுத்தி இதோ அந்தப்பெயர் உள்ளவர் சொல்லிவிட்டார், அவர் யார்?

நமக்கென்ன முஃப்தியா? காழியா? நம்முடைய இமாமா? வழிகேடர்கள் என்று அடையாளம் காணப்பட்டு, முஸ்லிம்களால் ஒதுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அன்பானவர்களே! இதையெல்லாம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்ு தஆலா பெண்களுக்கான ஒழுக்கத்தை கொடுத்தான்.

وَلَا تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْأُولَى

முஃமினான பெண்களே! நீங்கள் அறியாமைக்காலத்தில் சுற்றித்திருந்தீர்களே, ஹிஜாப் இல்லாமல் இருந்தீர்களே, அதுபோன்று நீங்கள் இருக்கக்கூடாது. (அல்குர்ஆன் 33 : 33)

அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் ;

فَاتَّقُوا الدُّنْيَا وَاتَّقُوا النِّسَاءَ، فَإِنَّ أَوَّلَ فِتْنَةِ بَنِي إِسْرَائِيلَ كَانَتْ فِي النِّسَاءِ

துன்யாவை பயந்துக்கொள்ளுங்கள்; பெண்களை பயந்துக்கொள்ளுங்கள். (பெண்கள் விஷயத்தில் கட்டுப்பாடாக, உஷாராக இருங்கள்.) இஸ்ரவேலர்களுடைய முதல் குழப்பமே அவர்களின் பெண்களினால் ஏற்பட்டது தான்.

அறிவிப்பாளர் : அபூ சயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 2742.

பெண்களின் விஷயத்தில் எப்போது அல்லாஹ்வின் சட்ட வரம்புகளை மீறினார்களோ, அப்படியே சன்னம் சன்னமாக, கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய தீனில் இருந்து அவர்கள் விலக ஆரம்பித்தார்கள்.

அதுபோன்று, அன்பானவர்களே! இன்று நம்முடைய சமுதாயமக்கள், அன்னிய கலாச்சாரத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய விஷயங்கள் மிக முக்கியமான ஒன்று.

அவர்களைப் போன்று இவர்களும் தங்களுடைய மகிழ்ச்சியாக கொண்டாடக்கூடிய நாட்களை ஏற்படுத்திக்கொண்டது, இது முக்கியமாக நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் தொடர்ந்து பெரிய ஃபித்னாக்களை இந்த சமுதாயம் சந்திக்க இருக்கின்றது.

கிறிஸ்துமஸ் என்ற பெயரில், நியூஇயர் என்ற பெயரில், மாற்றார்கள் கொண்டாடக்கூடிய, அந்த குதுகளங்களை முஸ்லிம்கள் தங்களுக்கு ஆகுமானதாக கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

இது மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ நாட்கள், ஃபாதர்ஸ் டே, மதர்ஸ் டே, சில்ட்ரன்ஸ் டே, உமன்ஸ் டே என்று எத்தனையோ நாட்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

காதலர்கள் தினம் என்றெல்லாம். இவையெல்லாம் இஸ்லாமிய சமுதாயத்தின் அந்த அழகை கட்டுப்பாட்டை குழைக்ககூடிய விஷயம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஒரு முஸ்லிமிற்கு அனுமதி இல்லை. மாற்றார்கள் கொண்டாடக்கூடிய இந்தக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்கு. அது கிறிஸ்துமஸாக இருக்கட்டும், நியூ இயராக இருக்கட்டும்.

அல்லது மாற்றார்களின் எந்த ஒரு சிறிய பெரிய பண்டிகைகள், பெருநாட்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம்கள் இதில் வாழ்த்து தெரிவிப்பதோ, அவர்களைப் போன்று உடை உடுத்துவதோ, அவர்களுக்கு இந்த நாட்களில் இனிப்புகள் வழங்குவது, இப்படி எதையும் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி இல்லை.

அப்போது சிலர் நினைக்கலாம்; பலதரப்பட்ட மக்கள் சமூகமாக வாழக்கூடிய ஒரு இடத்தில் இப்படி நாம் இருப்பதா?

அன்பானவர்களே! பலதரப்பட்ட சமுதாயத்தில், சமூகம் இருக்கின்ற சூழ்நிலையில், நாம் வாழ்வதற்கு அர்த்தம் அவர்களோடு அவர்களுடைய மார்க்கத்தில் கலாச்சாரத்தில் கலந்துவிடுவது அல்ல.

அவர்களை நம்பக்கம் அழைப்பதற்காக, தூயக்கலாச்சாரத்தின் பக்கம் அழைப்பதற்காக நாம் இருக்கின்றோமே தவிர, அவர்களின் கலாச்சாரத்தில் இணைந்து அவர்களில் ஒருவராக மாறுவதற்கு அல்ல.

அதுபோன்று அவர்களிடம் பகைமை காட்டுவது; அல்லது அவர்களோடு நாம் வெறுப்பில் சண்டை சச்சரவு ஏற்படுத்துவது அல்ல. அவர்களுடைய பண்டிகைகளை அவர்கள் கொண்டாடுகிறார்கள். அவ்வளவுதான்.

இது அவர்களுக்குரிய பெருநாட்கள். அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். நமக்கு பெருநாள் இருக்கிறது; நமக்கென்று பண்டிகை இருக்கிறது. அதிலே நாம் சந்தோஷமாக இருப்போம்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய காலத்தில் மதினாவிற்கு வந்தபோது, ஒரு நாளில் மதீனாவாசிகள் எல்லாம் சந்தோஷமாக இருந்தார்கள். இது என்ன நாள்? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். அல்லாஹ்வுடைய தூதர் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

" إِنَّ اللَّهَ قَدْ أَبْدَلَكُمْ بِهِمَا خَيْرًا مِنْهُمَا: يَوْمَ الْفِطْرِ، وَيَوْمَ النَّحْرِ "

இல்லை இல்லை. இந்த அறியாமைக்கால எல்லா கலாச்சாரங்களில் இருந்தும் அல்லாஹ் நம்மைவிடுவித்து, நமக்கென்று இரண்டு பெருநாட்களை கொடுத்திருக்கிறான்.

(அந்த இரண்டு பெருநாட்கள்தான் நாம் கொண்டாடுவதற்கு, வாழ்த்துக்களை பரிமாறிவதற்கு, நாம் குதுகலமாக இருப்பதற்கும், உண்டான நாட்களே தவிர, அறியாமைக்

காலத்தில் கொண்டாடப்பட்ட பண்டிகைகள், பெருநாட்கள் எல்லாம், இனி இஸ்லாமிய மார்க்கத்தில் முஸ்லிம்களுக்கு கிடையாது என்று அல்லாஹ்வுடைய தூதர் நபி (ஸல்) அழுத்தம் திருத்தமாக சொன்னார்கள்.)

அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹுு அன்ஹுு, நூல் : முஸ்னத் அஹ்மத், அபூ தாவூத், எண் : 12006, தரம் : ஸஹீஹ் (அல்பானி)

இதற்குப்பிறகும் ஒருவன் அப்படிச்சென்றால் அவருடைய நிலைமை என்னவாகும்?அல்லாஹ் பாதுகாப்பானாக!

அல்லாஹ் சொல்கிறான் ;

وَالَّذِينَ لَا يَشْهَدُونَ الزُّورَ وَإِذَا مَرُّوا بِاللَّغْوِ مَرُّوا كِرَامًا

இன்னும், எவர்கள் பொய் சாட்சி சொல்லாமலும் (வீணான காரியம் நடைபெறும் இடத்திற்குச் செல்லாமலும்) ஒருக்கால் (அத்தகைய இடத்திற்குச்) செல்லும்படி ஏற்பட்டு விட்டபோதிலும் (அதில் சம்பந்தப்படாது) கண்ணியமான முறையில் (அதைக் கடந்து) சென்று விடுவார்கள். (அல்குர்ஆன் 25 : 72)

அவர்கள் زور -ஜூரில் கலந்து கொள்ளமாட்டார்கள், அது என்ன ஜூர்? நம்முடைய சலஃப்கள் சொல்கிறார்கள்; அதாவது மாற்றார்கள், அந்நியர்களுடைய பண்டிகைகளில் அவர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள்.

இமாம் இப்னு கைய்யும் (ரஹி) அவர்கள் சொல்கிறார்கள்;

மாற்றார்கள் உடைய பண்டிகைகளில், அவர்களுக்கு வாழ்த்துக் சொல்லக்கூடியவர், அது குஃப்ர் இல்லை என்று ஒருகால் வைத்துக் கொண்டாலும், குஃப்ருக்கு நெருக்கமான ஒன்றுதான். அப்படி குஃப்ர் இல்லை என்று ஒரு வாதத்திற்கு வைத்துக்கொண்டாலும், கண்டிப்பாக, அது பெரும்பாவத்தில் ஒன்றாக இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

அஹ்காமு அஹ்லித் திம்மதி, பக்கம் – 441

ஆசிரியர் இமாம் இப்னு கைய்யும் (ரஹி)

ஆகவே கண்ணியத்திற்குரியவர்களே! நம்முடைய பிள்ளைகள் இதுபோன்ற நாட்களில் அந்நியர்களோடு சுற்றித்திரிவது, அதுவும் குறிப்பாக இப்போது பண்டிகைகளில் சந்தோஷமாக மகிழ்ச்சியாக இருப்பது என்பது கலாச்சார சீரழிவின் உச்சத்திற்கு சென்று, ஆடல், பாடல், விபச்சாரம், குடி கும்மாளம், அதற்குப்பிறகு கொலை, கொள்ளை, சீரழிவு என்று பத்திரிக்கைகளில் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

இதையெல்லாம் சரியானது, ஆகுமானது என்று சொல்லி இந்த கலாச்சாரத்தை உள்வாங்கிக்கொண்ட இந்த கலாச்சாரத்தை சீரழித்துக்கொண்டவர்களே இதனுடைய பின்விளைவுகளால் இப்போது தலையை பிய்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

எப்படி இதை நிறுத்துவது என்பதாக. பதினோரு மணிக்குமேல், 12 மணிக்கு மேல் கிளப்புகளை திறக்ககூடாது; அரசாங்கம் சட்டம் போடுகிறது. குடித்துவிட்டு வாகனம் ஓட்டக்கூடாது என்று என்னென்னமோ சட்டங்களை எல்லாம் அவர்கள் போட்டு, இதை அவர்கள் தடுக்கப்பார்க்கிறார்கள், உடலை விட்டு விட்டு வாலைப் பிடித்துக்கொண்டு, அழுவதைப்போன்றுதான் இவர்களுடைய நிலை இருக்கிறது.

எதை அல்லாஹ் தடுத்தான் அதை தடுத்துவிட்டால் இந்த பிரச்சினை இருக்குமா?

ஆகவே கண்ணியத்திற்குரியவர்களே! நம்முடைய வாலிபர்கள் எங்கே செல்கிறார்கள்? ஏன் செல்கிறார்கள்? என்பதைக் கண்காணிக்கவேண்டிய பொறுப்பு தந்தை தாயின் பொறுப்பாக, அவர்களுடைய இடத்தில் இருக்கக்கூடிய, வீட்டிலுள்ள பொறுப்பாளர்,வீ ட்டில் உள்ள பெரியவர்களுடைய கடமையாக இருக்கிறது.

அப்படியில்லாமல், இன்றைய காலத்தில் இதெல்லாம் சகஜம் என்று உங்களுடைய வாலிபர்களை கண்காணிக்காமல், கண்டிக்காமல், அவர்களை திருத்தாமல் விட்டுவிட்டால், அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்!

எப்போது அல்லாஹ்வுடைய மார்க்கத்தை மீறி ஒரு குடும்பம் துணிந்து விட்டதோ, அந்த குடும்பத்திலிருந்து அல்லாஹ் தனது பாதுகாப்பை எடுத்துக்கொள்வான்.

நாம் நம்முடைய நோன்பு நாட்களில் தொடர்ந்து சொல்லிக் கொண்டே வந்தோம். பிள்ளைகளை கண்காணியுங்கள்; நம்முடைய பிள்ளைகள், குறிப்பாக வாலிபர்கள் செய்யக்கூடிய அநியாயங்கள், அக்கிரமங்கள் எத்தனை குடும்பங்கள் தங்களுடைய வாலிபப் பிள்ளைகளை இழந்துவிட்டு இன்று கண்ணீரில் மூழ்கி இருக்கிறது தெரியுமா?

அவர்கள் அந்த இரவு நாட்களில் தங்களது வாகனங்களை, பைக்களை, கார்களை எடுத்துக்கொண்டு ரேஸ் செய்து தங்களுடைய உயிரை மாய்த்துக்கொண்டு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

அவர்களது பெற்றோர்களும், அவர்களது குடும்பமும் கண்ணீரில் மூழ்கி இருப்பதைப் பார்க்கிறோம்.

இப்படி இதையெல்லாம் ஒரு பக்கம் பெரும்பாவம், இறை நிராகரிப்புக்கு நிகரான ஒருபாவம், என்பதைக் கருத்தில் கொள்வதோடு இந்த பாவத்தினால் சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்தான பின்விளைவுகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஒரு பக்கம் அல்லாஹ் நிராகரிப்பதற்கு, அல்லாஹ்வை இணைவைப்பதற்கு, அந்த இணைவைக்கின்ற கூட்டத்தோடு சேர்வதற்குரிய பாவம்.

இன்னொருபக்கம் அந்தப் பாவத்தால், நம்முடைய சமுதாயத்திற்கு இழிவையும் இழப்பையும் கவனிக்கத் தவறிவிடாதீர்கள்.

அல்லாஹ் அல்லாஹு சுப்ஹானஹு தஆலா இத்தகைய பலவிதமான சீர்கேடுகள், குழப்பங்கள், மற்றும் மாற்றார்களின் கலாச்சாரத்திலிருந்து நம்மை பாதுகாப்பானாக!

நம்முடைய சமுதாயத்தை பேணிப் பாதுகாக்கக்கூடிய நன்மக்களாக, குடும்பத்தில் நல்ல பொறுப்பாளர்களாக அல்லாஹ் நம்மை ஆக்கி அருள்வானாக!

நம்முடைய வாலிப பிள்ளைகளையும், நம்முடைய வாலிப பெண்களையும், ஆண்களையும், அல்லாஹ்வுடைய அச்சத்தில் வாழவைத்து, அல்லாஹ்வுடைய மார்க்கத்தை, நபியின் சுன்னாவையும், பின்பற்றக்கூடிய நல்ல தலைமுறைகளாக அல்லாஹுதஆலா அவர்களை உருவாக்கி அருள்வானாக!

மாற்றார்களின் குழப்பங்களில், வழிகேடுகளில், நம்முடைய சமுதாயம் சிக்கிவிடாமல், அல்லாஹ் பாதுகாப்பானாக!

**ஆமீன்**

أقول قولي هذا أستغفر الله لي ولكم ولسائر المسلمين من كل ذنب فاستغفروه إنه هو الغفور الرحيم

**குறிப்புகள் :**

குறிப்பு 1)

حَدَّثَنَا ابْنُ السَّرْحِ، حَدَّثَنَا ابْنُ وَهْبٍ، عَنْ سَعِيدِ بْنِ أَبِي أَيُّوبَ، عَنْ مُحَمَّدِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ الْمَكِّيِّ يَعْنِي ابْنَ أَبِي لَبِيبَةَ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي سُلَيْمَانَ، عَنْ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ، أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «لَيْسَ مِنَّا مَنْ دَعَا إِلَى عَصَبِيَّةٍ، وَلَيْسَ مِنَّا مَنْ قَاتَلَ عَلَى عَصَبِيَّةٍ، وَلَيْسَ مِنَّا مَنْ مَاتَ عَلَى عَصَبِيَّةٍ» (سنن أبي داود- 5121)

حكم الألباني : ضعيف , المحدث : شعيب الأرناؤوط إسناده ضعيف لكنه صحيح بمعنا , المحدث : ابن حجر العسقلاني - في إسناده انقطاع

ஹதீஸின் தரம் : இமாம் அல்பானி -ளயீஃப், இமாம் ஷுஐப் அல்அர்னாவுத் –சனத் பலகீனமானது என்றும் கருத்து சரியானது என்றும் கூறியுள்ளார்கள். இமாம் இப்னு ஹஜர் – இந்த சனதில் இடைமுறிவு உள்ளது.

DARUL HUDA

211(102), FIRST FLOOR, LINGHI STREET, MANNADY, CHENNAI – 600001.

muftiomar@gmail.com, 044 25247866, 9840174121, 9884469044

Facebook: https://www.facebook.com/muftiomarsheriffqasimi/

Youtube: https://www.youtube.com/channel/UC4CmuDuplV91jmQ2jX32Iwg?view_as=subscriber

Website: http://www.darulhuda.net/